# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2020

திருநெல்வேலி மாவட்டம் பத்தாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 100

பகுதி - I ( 15 மதிப்பெண்கள்)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 x 1 = 15

1. பூ விரியத் தொடங்கும் நிலையைக் குறிக்கும் சொல்
   அ) அரும்பு ஆ) போது இ) மலர் ஈ) வீ
2. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் நூலின் ஆசிரியர்.
   அ) விநாயகம் ஆ) தியாகராஜன்
   இ) காந்திராமன் ஈ) ம.பொ.சிவஞானம்
3. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை
   அ) சேவையாட்டம் ஆ) ஒயிலாட்டம் இ) மயிலாட்டம் ஈ) கரகாட்டம்
4. அதிவீரராம பாண்டியர் எழுதிய மற்றொரு நூல்
   அ) காற்றே வா ஆ) வெற்றி வேற்கை
   இ) நீதிவெண்பா ஈ) முல்லைப் பாட்டு
5. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது.
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானைத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
6. இருவர் உரையாடுவது போன்ற ஓசை
   அ) செப்பலோசை ஆ) அகவலோசை
   இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை
7. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் என்பது
   அ) பால் வழுவமைதி ஆ) இட வழுவமைதி
   இ) திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி
8. தீவகம் என்னும் சொல்லின் பொருள்
   அ) தீபகற்பம் ஆ) விளக்கு இ) தீவு ஈ) தங்கம்
9. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
   அ) உழவு , மண், ஏர், மாடு ஆ) மண் , மாடு , ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
10. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது ________ வினா
    அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா , மறைவிடை
    இ) அறியா வினா , சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
11. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் , இத்தொடர்.
    அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
    இ) செய்தித்தொடர்பு ஈ) கலவைத் தொடர்

<u>**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**</u>

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்?
    அ) சிலப்பதிகாரம் ஆ) இரட்டுற மொழிதல்
    இ) காசிக்கண்டம் ஈ) அன்னை மொழியே
13. இப்பாடலின் ஆசிரியர்
    அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார்
    இ) பாரதியார் ஈ) குலசேகர ஆழ்வார்

14. இப்பாடலில் வந்துள்ள அடியெதுகை சொற்கள்
அ) முத்தமிழ். மெத்த ஆ) மெத்த - நித்தம்
இ) கண்டதால் ஈண்டு ஈ) முத்தமிழ் வய்ப்பதால்

15. முத்தமிழ் விரித்தெழுது.
அ) மா , பலா, வாழை ஆ) இயல் , இசை, நாடகம்
இ) சேரர் , சோழர் , பாண்டியர் ஈ) அறம் , பொருள் , இன்பம்

## பகுதி - II பிரிவு - 1 (மதிப்பெண்கள்: 18)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.** 4 x 2 = 8

21 -ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
அ) பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிழ் திட்ட இயக்குநராகப் பணியாற்றினார்
ஆ) தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை
17. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
18. கரகாட்டம் குறிப்பு வரைக.
19. காய்மணியாடு முன்னர் காய்ந்தெனக் காய்ந்தேன். உவமை உணர்த்தும் கருத்து யாது?
20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
21. ‘உலகு’ என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5 x 2 = 10

22. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு இத்தொடரை இரு தொடர்களாக்குக.
23. பொது வாழ்வில் ------------ கூடாது ----------- அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடிப்பு , நடித்தல்)
24. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர்
முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர்
கடலுக்குச் சென்றனர்.
25. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) அள்ளி இறைத்தல் ஆ) மனக்கோட்டை
26. கலைச்சொற்கள் தருக.
அ) Humanism ஆ) Territory
27. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.
விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர் உறவினர் வேறு விருந்தினர் வேறு முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர் விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.
28. பொறித்த பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

## பிரிவு - 1

2 x 3 = 6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
30. சோலைக் (பூங்கா) காற்றும் மின் விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி

குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது உயிர்கள் தோன்ற நிலை பெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

இ) இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?
33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்.
34. அடிபிறழாமல் எழுதுக.
    வெய்யோன் ஒளி - எனத் தொடங்கும் கம்பராமாயண பாடல் *(அல்லது)*
    நவமணி வடக்க யில் போல் - எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்

## பிரிவு - 3


**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2 x 3 = 6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
    இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.
36. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
    மெய்ப்பொருள் காணப தறிவு. இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
37. நிரல்நிறை - அணியை சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 5 x 5 = 25

38. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. *(அல்லது)*
    கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.
39. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக. *(அல்லது)*
    பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினருக்கு கடிதம் எழுதுக.
40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கண்ணன் என்பவரின் மகன் வளவன் பத்தாம் வகுப்பில் 500க்கு 420 மதிப்பெண்கள் பெற்று மேல்நிலை வகுப்பில் கணிதப்பிரிவில் தமிழ் வழியில் சேர விரும்புகிறார். அவருடைய பிறந்த தேதி 15 - 05 - 2004 அவர் தமிழ்ப்பாடத்தில். 89 ஆங்கிலப் பாடத்தில் 78 கணிதப்பாடத்தில் 80 அறிவியல் பாடத்தில் 92 சமூக அறிவில் பாடத்தில் 86 மதிப்பெண்கள் பெற்று உள்ளார். அவருடைய பத்தாம் வகுப்பு பதிவெண் 5264756 கடந்த 2019 மார்ச் மாதம் அவர் பத்தாம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றுள்ளார் அவருடைய தாயாரின் பெயர் கோமதி, 45 கபிலர் நகர், திருச்சி என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார் தேர்வர் தன்னை வளவனாகப் பாவித்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்யவும்.

42. அ) புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள். உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக. *(அல்லது)*

மொழிபெயர்க்க:-

Therukoothu is, as its name indicates a popular from of theatre performed in the streets It is performed by rural artists The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the aritists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe Though the orchestra has a singer the artists sing in their ownvoices Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very Popular among rural areas.

## பகுதி - V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3 x 8 = 24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. *(அல்லது)*

ஆ) காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நலங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தம் இம் மூன்றும்
அயனும் யானுமே அறிந்தவை ; அறிக.

கண்ணதாசன்

திருச் செல்வி. மு.
பிராம் லைப்ரி
மே. நி. ப
வல்லம் 627809

44. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன. *(அல்லது)*

'அழகிரி சாமியின் ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குமரிக் கடல் முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்கு புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதிகூறிகோவை யாத்து. அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. *(அல்லது)*

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

★★★★★★